**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 164/2022**

**வாதி தரப்பு சாட்சி-1 குமரன் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 28.07.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) வா.சா.ஆ.4 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது கிரைய சொத்திற்கான பட்டா ஆகும். வா.சா.ஆ.4 எந்த தேதியில் பெறப்பட்டுள்ளது என்றால் 01.12.2022 ம் தேதி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பட்டாவில் எவ்வித மாற்றமும் இல்லாமல் தற்போதுவரை அப்படியேதான் உள்ளதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.4 ஆவணத்தில் எந்த கிராமம், எந்த சர்வே எண் உள்ளது என்றால், கல்லடை கிராமம், சர்வே எண் 112/1A4 க்கு உரியது. வா.சா.ஆ.4 எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 3.79.5 ஹெக்டேர் நிலமானது பீட்டர்ராஜ், சவரிமுத்து ஆகியோர் பெயரில் உள்ளது. வா.சா.ஆ.4 ல் எனது பெயர் பட்டாதாரராக இல்லை என்றால் சரிதான். எனது மனைவி பெயர் ஷாலினி. எனது மனைவியின் தாயார் பெயர் விஜயா. எனது மாமனார் பெயர் துரைராஜ். வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனது மனைவி சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண் 112/1A4 என்பது 9 ஏக்கர் 37 செண்ட் என்றால் சரிதான். மேற்படி சொத்து தற்போதுவரை உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.3 ஆவணம் யாரிடம் இருந்து கிரையம் பெறப்பட்டது என்றால் சிவக்குமார், உஷாராணியிடம் இருந்து கிரையம் பெறப்பட்டது. உஷாராணியின் கணவர் பெயர் துரைராஜ். உஷாராணி எனக்கு மாமியாரா என்றால் இல்லை. உஷாராணியின் கணவர் துரைராஜ் எனக்கு மாமனாரா என்றால் இல்லை. எனது மாமனார் துரைராஜ் தான் வா.சா.ஆ.3 ல் கண்டுள்ள துரைராஜ் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி உஷாராணி என்பவர் கதவு எண் 3/145A புங்கனூர் என்ற விலாசத்தில் வசிப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் கண்டுள்ள 5HP மின்இணைப்பின் எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. மேற்படி மின்இணைப்பு எண் வா.சா.ஆ.3 ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி

மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என தெரியுமா என்றால் பட்டாதாரர் பீட்டர் பெயரில் உள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தின் கிரையதாரரான சிவக்குமார் தனது அனுபவத்தில் கைப்பற்றுதலில் வைத்திருந்து கிரையம் செய்வதாக கண்டுள்ளது, சிவக்குமாரின் அனுபவ பாத்தியம் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும்.

3) சிவக்குமார் பெயரில் இருந்த அடங்கல், தீர்வை ரசீதுகள், மின் கட்டண ரசீதுகள் ஆகியவற்றை பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் எவ்வளவு ஏக்கர் நிலம், எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றேன் என்றால் 4 ஏக்கர் 68.5 செண்ட் நிலம், ரூ.15,50,000/- க்கு கிரையம் பெற்றேன். கிரையத்தொகையை யாரிடம் கொடுத்தேன் என்றால் உஷாராணியிடம் கொடுத்தேன். கிரையத்திற்கு முன்பு சிறிது சிறிதாகவும், கிரையத்தின் போது ரூ.5,00,000/- மும் கொடுத்தேன். நான் கிரையம் பெறும்போது கிரைய சொத்திற்கான வருவாய்துறை ஆவணங்கள் யார் பெயரில் இருந்தது என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் கிரையம் பெற்ற சொத்திற்கு வா.சா.ஆ.4 ல் கண்ட பட்டாதாரர்கள் பெயரில்தான் வருவாய்துறை ஆவணங்கள் இருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதிகள் வா.சா.ஆ.6 ன் படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் நான் சட்டப்படி கிரையம் பெறவில்லை என்றும், கிரைய சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

4) மேற்படி அறிவிப்பில் மேற்படி கிரையம் குறித்து மாவட்ட பதிவாளருக்கும், வருவாய்துறையினருக்கும் மேற்படி ஆவணங்கள் செல்லாது என அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறுதான் கண்டுள்ளது. வா.சா.ஆ.6 அறிவிப்பிற்கு பின்னிட்டு மாவட்ட பதிவாளரோ, வருவாய் துறையினரோ என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. 01.08.202 ல் நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் வா.சா.ஆ.3 சட்டப்படி செல்லத்தக்கதல்ல, மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் எந்தஒரு மறுபயனும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் கண்ட கிரையதாரர் உஷாராணி என்பவர் எனது மாமியார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் கண்டுள்ள

சொத்தின் நான்கு எல்லை விபரங்கள் தவறானது என்றால் சரியல்ல. நான் சட்டப்படி உண்மையான உரிமையாளர்களிடம் இருந்து கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் எனது செல்வாக்கை பயன்படுத்தி பதிவுத்துறையில் குறுக்கு வழியில் வா.சா.ஆ.3 ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

5) தாவா சர்வே எண்ணில் கண்டுள்ள முழுசொத்தும் பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது கிரைய சொத்திற்கு வடபுறம் பன்னீர்செல்வம் நிலம் உள்ளது. எனது கிரைய சொத்தில் கிணறு உள்ளதா என்றால் உள்ளது. எனது கிரைய சொத்தில் உள்ள மின் இணைப்பு ஆரோக்கியசாமி தகப்பனார் சவரிமுத்து என்பவர் பெயரில் உள்ளது என்றால் இருந்திருக்கலாம், ஞாபகமில்லை. வா.சா.ஆ.3 ல் கண்ட சொத்திலோ, மின் இணைப்பிலோ எனக்கு எந்த உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்கு, எந்த அமைப்பில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கு எல்லை விபரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் பெயரளவிற்கு பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியிருப்பது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**